WEB COPY

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

**DATED: 24-02-2026**

CORAM

**THE HON'BLE MR.JUSTICE V. LAKSHMINARAYANAN**

**WP No. 6022 of 2026**

A.Ganasekar

..Petitioner(s)

Vs.

1. The Additional Chief Secretary
   Rural Development and Panchayat Raj Department,
   Chief Secretariat,
   Chennai- 600 059.

2. The District Collector
   Office of the District Collector,
   Villupuram District- 605 602.

3. The Block Development Officer
   Block Development Office,
   Vanur, Thiruchirambalam,
   Villupuram District- 605 109. ..Respondent(s)

Prayer : This Writ Petition filed under Article 226 of the Constitution of India, to issue a Writ of Mandamus, directing the 1st respondents to consider and dispose of petitioner representation dated 11.12.2025 to reconsider the government order and merge our Kunnam Panchayat in Vanur Panchayat Union and Publish a government order within the stipulated time has fixed by this Court.

For Petitioner : Mr.K.Sathyaraj



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

For Respondent(s) : Mr.N.Naveenkumar
Govt.Advocate

**ORDER**

The petitioner came forward with this writ petition seeking a direction to merge Kunam Panchayat with Vanur Panchayat Union.

2. When the matter was taken up, Mr.N.Naveenkumar, learned Government Advocate appearing for the respondents has produced the proceedings of the Government in G.O (Ms.)No.38, Rural Development and Panchayat Raj Department dated 13.02.2026 in terms of the said proceedings, the Government has decided to merge the panchayats has sought by the petitioner.

3. The said proceedings is scanned and extracted hereunder : -



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

சுருக்கம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) – விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து கிளியனூர் எனும் புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது – இறுதி ஆணை மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) பிரிவு 15, உட்பிரிவு (3) மற்றும் (4)–ன்படி அறிவிக்கை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் [பரா–2(1)] துறை

அரசாணை (நிலை)எண். 38

நாள். 13.02.2026.
விசுவாவசு, மாசி 01,
திருவள்ளுவர் ஆண்டு 2057

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.345, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி [(பரா–2(1)]த் துறை, நாள் 08.12.2025.
2. தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 817, நாள் 08.12.2025.
3. விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். அ5/4835/2024, நாள்.21.01.2026.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.69023/2023/பரா.1.1, நாள்.23.01.2026.

---

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மற்றும் மறுசீரமைப்பு செய்து உத்தரவிடப்பட்டது. அதில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள 65 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய வானூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் 34 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 31 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி கிளியனூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கியும் அரசு ஆணையிட்டுள்ளது.

WEB COPY



2. இதனை தொடர்ந்து, இரண்டாவதாக படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 817, நாள் 08.12.2025–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின் படி தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் இந்த அறிவிக்கை குறித்த மறுப்பினை தெரிவிக்க விரும்பினால் எழுத்து மூலம் அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென்றும், அவ்வாறு அந்த உள்ளூர் வட்டார பகுதியில் குடியிருந்து வருகின்ற யாரிடமிருந்தும் மேலே கூறப்படும் காலக்கெடுவுக்குள் மறுப்பு ஏதும் பெறப்பட்டால் அதனை அரசு உரிய பரிசீலனை செய்யும்பொருட்டு எழுத்து மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவில் கீழ்க்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது:

திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மற்றும் மறுசீரமைப்பு செய்து முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் உத்தரவிடப்பட்டது. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 15, உட்பிரிவு (1)–ன் கீழ் தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள வானூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் 34 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 31 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி கிளியனூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்குவதற்கு பொதுமக்களிடமிருந்து 08.12.2025 முதல் 19.01.2026 வரை வரப்பெற்ற ஆட்சேபனைகள் கீழ்க்காணுமாறு பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது:

| அரசாணை(நிலை) எண். 345, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் [(பரா–2(1)] துறை, நாள் 08.12.2025–இல் விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து வானூர் (ம) கிளியனூர் ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கியதில் மாற்றம் செய்திடக்கோரிடும் கிராம ஊராட்சிகள் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசாணையின் படி | | | திருத்தம் செய்ய கோருவது | | |
| வ. எண் | கிராம ஊராட்சியின் பெயர் | ஊராட்சி ஒன்றியம் | கிராம ஊராட்சியின் பெயர் | மாற்றம் செய்யக்கோரும் ஊராட்சி ஒன்றியம் | குறிப்பு |
| 1 | ஆதனப்பட்டு | வானூர் | ஆதனப்பட்டு | கிளியனூர் | தூரம்<br>வானூர் – ஆதனப்பட்டு 20 கிமீ<br>கிளியனூர் – ஆதனப்பட்டு 4 கிமீ |



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | குன்னம் | கிளியனூர் | குன்னம் | வானூர் | தூரம்<br>வானூர் – குன்னம் 9 கிமீ<br>கிளியனூர் – குன்னம் 40 கிமீ |

4. மேலும், மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. எனவே, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பின் அடிப்படையில் வானூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் 34 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு ஊராட்சி ஒன்றியமாகவும் மற்றும் 31 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி கிளியனூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கி மேலே 1 மற்றும் 2–இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கை தொடர்பாக அப்பகுதி மக்களிடமிருந்து ஆட்சேபணைகள் பெறப்பட்ட நிலையில் அவ்வாணையினை பகுதியளவு திருத்தம் செய்து கிளியனூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குன்னம் கிராம ஊராட்சியை வானூர் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்தும் மற்றும் வானூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆதனப்பட்டு கிராம ஊராட்சியை கிளியனூர் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்தும் இறுதி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி இறுதி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, மேலே 1 மற்றும் 2–இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கையில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மற்றும் மறுசீரமைப்பு செய்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டத்தில் அப்பகுதி மக்களிடமிருந்து ஆட்சேபணைகள் பெறப்பட்ட நிலையில் அவ்வாணையினை பகுதியளவு திருத்தம் செய்து கீழ்க்கண்டவாறு மறுசீரமைப்பு செய்து இறுதி ஆணை மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு–15, உட்பிரிவு (3) மற்றும் (4)–ன்படி அறிவிக்கை வெளியிடவும் உறுதி செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கிளியனூர் எனும் புதிய ஊராட்சி ஒன்றியம் அதில் இணைக்கப்பட்ட குன்னம் கிராம ஊராட்சியை மீண்டும் வானூர்

https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்து 34 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி வானூர் ஊராட்சி ஒன்றியமாக மறுசீரமைப்பு செய்யப்படுகிறது.

(ஆ) விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆதனப்பட்டு கிராம ஊராட்சியை தற்போது புதிதாக உருவாக்கப்படும் கிளியனூர் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்து 31 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி புதிய கிளியனூர் ஊராட்சி ஒன்றியமாக (பின்னிணைப்பு II-இல் உள்ளவாறு) உருவாக்கப்படுகிறது.

7. மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும். அதனடிப்படையில், இந்த அரசாணையின்படி, பிரிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் எல்லை வரையறை 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும்.

8. விழுப்புரம் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் முடிவுற்ற பின்னர் இந்த அரசாணை நடைமுறைப்படுத்தப்படும்.

9. இவ்வாணையினைத் தொடர்ந்து, 13.02.2026 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் பின்னிணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகளை (I & II) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுமாறு பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-75 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-75
(13.02.2026 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிட)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக).

WEB COPY





<u>நகல்</u>

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.

நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.

இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**V.LAKSHMINARAYANAN, J.**

**KKD**

4. Recording the same, this writ petition stands closed. No costs.

**24-02-2026**

Index: Yes/No
Speaking/Non-speaking order
Neutral Citation: Yes/No
KKD

**To**

1. The Additional Chief Secretary
   Rural Development and Panchayat Raj Department,
   Chief Secretariat,
   Chennai- 600 059.

2. The District Collector
   Office of the District Collector,
   Villupuram District- 605 602.

3. The Block Development Officer,
   Block Development Office,
   Vanur, Thiruchirambalam,
   Villupuram District- 605 109.

**WP No. 6022 of 2026**



https://www.mhc.tn.gov.in/judis